# SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD
# ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය
# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

# Sri Lanka Export Excellence Initiative 2026
# Under EDB New Exporter Development Programme

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB), ஏற்றுமதி சாத்தியங்கள் கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவான வர்த்தகங்களை சர்வதேச சந்தைக்கு இட்டுச் செல்லும் நோக்கில் Sri Lanka Export Excellence Initiative (SLEEI) நிகழ்ச்சிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த நிகழ்ச்சி மூலம் இலங்கை வர்த்தகத்தை சர்வதேச சந்தையில் சிறப்பு வாய்ந்ததாக மாற்றுவதற்கு பரந்துபட்ட ஒத்துழைப்பு, பயிற்சி மற்றும் சந்தை நுழைவை பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

## பிரதான நோக்கங்கள்

- இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சி நிறுவனங்களுக்கு சந்தையில் பேண்தகு ஏற்றுமதி வர்த்தகம் ஒன்றாக நிலைகொள்வதற்கு இலக்கு ஒன்றின் மூலம் உதவுதல்
- ஏற்றுமதி சந்தைக்கு நுழையும் தேவைகள் தொடர்பில் அறிவூட்டல்
- சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்களுக்கு சர்வதேச சந்தை நுழைவுக்கு வாய்ப்பு அளித்தல்.

## நிகழ்ச்சி

- **கட்டம் I – ExpoNavigator**
  ஏற்றுமதி சந்தை நுழைவுக்கான தேவைகள், சட்டத்தை பின்பற்றல் மற்றும் சந்தை வாய்ப்புகள் தொடர்பில் பரந்த அறிவைப் பெற்றுக்கொடுத்தல்.
- **கட்டம் II - ExpoScaleUp**
  தேர்வு செய்யப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்களை ஏற்றுமதி செய்வதற்கு தயார்படுத்தலுக்கு ஏற்றுமதி சந்தைப்படுத்தல் திட்டங்களை தயாரித்தல் மற்றும் மதிப்பிடுதல்
- **கட்டம் III – ExpoConnect**
  சந்தை ஆய்வு சுற்றுலா, சர்வதேச வர்த்தகக் கண்காட்சி, வெளிநாட்டு வர்த்தகக் கூட்டங்கள் ஊடாக ஏற்றுமதி சந்தை நுழைவுக்கு உதவி வழங்கல்

## யாருக்கானது

மேலுள்ள நிகழ்ச்சிகளில் கட்டம் II - ExpoScaleUp இற்காக கீழுள்ள தகைமைகளை பூர்த்தி செய்கின்ற இலங்கை ஏற்றுமதியாளர்கள் மற்றும் ஏற்றமதி சாத்தியத்தைக் கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியா-ளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- 100% இலங்கை உரித்தைக் கொண்ட வர்த்தகம் ஒன்றாக இருத்தல்
- ஏற்றுமதி சந்தைக்காக தகுதியான உற்பத்தி அளவு இருத்தல்
- வர்த்தகத்தை ஆரம்பித்து குறைந்தது 3 ஆண்டுகள் பூர்த்தி செய்திருத்தல்
- பதிவு செய்யப்பட்ட உற்பத்தி நிலைய வசதிகள்/ சேவை வசதிகள் இருத்தல்
- சர்வதேச சந்தைக்கு தேவையான தரச் சான்றை பெற்றிருத்தல் (மேலதிக தகைமையாக கருத்தில்கொள்ளப்படும்)

### இது தவிர

- தற்போது ஏற்றுமதியினை 05 நாடுகளிற்கு மேல் ஏற்றுமதி செய்யாத சிறிய மற்றும் நடுத்தர அளவான ஏற்றுமதியாளர்கள் விண்ணப்பிப்பதற்கும் ஊக்கப்படுத்தப்படுகின்றனர்.

## உற்பத்தி பொருட்கள்

- பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும் பானங்கள்
- தெங்கு அடிப்படையிலான உற்பத்திகள்
- வாசனைச்சரக்குகள், வாசனை எண்ணெய் மற்றும் அது சார்ந்த உற்பத்திகள்
- தகவல், தொழில்நுட்ப மற்றும் வணிக செயன்முறை வெளிப்பணியமர்த்தல் (ICT/BPO)
- மூலிகை அழகுசாதன உற்பத்திகள்
- பரிசுகள், கைவினைப்பொருட்கள், Fashion மற்றும் lifestyle சார்ந்த உற்பத்திகள்

## விண்ணப்பம்

ஒன்லைன் விண்ணப்ப வழிகாட்டலை www.srilankabusiness.com என்ற இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை இணையதளத்தின் “அறிவித்தல்” பகுதியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, குறித்த அனைத்து ஆதார ஆவணங்களுடன் 2026 பெப்ரவரி 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மேலுள்ள இணையதளத்தில் உள்ள இணைப்பு ஊடாக ஒன்லைனில் அனுப்புதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு பிராந்திய அபிவிருத்தி பிரிவின் உதவிப் பணிப்பாளர், நிபுனி முனசிங்க அவர்களை அழையுங்கள்: **011-2300716, 011-2300705-11 நீடிப்பு: 335, nipuni@edb.gov.lk**

**தலைவர் மற்றும் தலைமை நிர்வாகி**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**

**NDB-EDB கோபுரம், இலக்கம் 42, நவம் மாவத்தை, கொழும்பு 02.**
**இணையதளம்: http://www.srilankabusiness.com**